**கவனிக்க** .- *30.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1827 - 2013 සැප්තැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2013.09.06

*1827 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 152 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க**.- (i) *விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகின்றது.*

(ii) *வல்பொல பியானந்த கல்வி கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013 ஒகத்து 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாகபிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரிட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கரு ஜயசூரிய ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

பின்வரும் பொதுக்குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச் சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

(அ) தனியார் முயற்சிகள் மூலம் நடாத்தபட்டுவரும் இலங்கை பொலிமர் கைத்தொழிலை முன்னேற்றுவதற்காக கல்வி, தொழில்நுட்ப பயிற்சி, மனிதவள அபிவிருத்தி போன்றவற்றை வழங்கும் முன்னோடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(ஆ) இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தினால் நடத்தப்படும் செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்கேற்கும் வகையில் பொலிமர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் பரஸ்பர தொடர்புகளை ஏற்படுத்தி அதற்கான வாய்ப்புக்களை வழங்கலும்; பிறவும்,

கரு ஜயசூரிய
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

9-28

---

## அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில் (கொழும்பில் நடைபெறும்) மேல்மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

கொழும்பு-04, ஜோசப்ஒழுங்கையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள Touchwood Investments PLC இன் விடயத்தில்

வழக்கில: 31/2013/ CO

அத்துடன்

தன்மை: ஒடுக்குதல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் பாகம்; XII இன் நியதிகளின் கீழும் அவற்றின் படியும் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பத்தின் விடயத்தில்
குருகுல ஆராச்சிகே டொன் லெனார்ட் பிரியங்கநாணாயக்கார396/5, கொஸ்வத்த வீதி, களபளுவாவ, ராஜகிரிய.
.................................................மனுதாரர்

அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பெனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று 2013, யூலை 24 ஆம் நாளன்று ராஜகிரிய, களபளுவாவ, கொஸ்வத்த வீதி, 396/5 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குருகுல ஆரச்சிகே டொன் லெனார்ட் பிரியங்க நாணாயக்கார என்பவரினால் சொல்லப்பட்ட மனு நீதிமன்றத்துக்கு முன் வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனு 2013 ஒற்றோபர் 3 ஆம் நாளன்று நீதிமன்றத்தின் முன்னர் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப்படுகின்றதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது. சொல்லப்பட்ட மனுவின் மீது கட்டளையாக்கப் படுவதனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்பும் சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவு தொகை செலுத்துநர், அந்நோக்கத்திற்காக, விசாரிக்கப்படும் நேரத்தில் நேரில் அல்லது அவரது சட்டத்தரணி மூலம் தோன்றலாம். மனுவின் பிரதியொன்று, தேவையாகவுள்ள சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன் கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு, அதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டவரினால் வழங்கப்படும்.

எவ் ஜே அன்ட் ஜீ டீ சேரம்,
மனுதாரருக்கான சட்டத்தரணிகள்,
216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10

**குறிப்பு**:- சொல்லப்பட்ட மனு விசாரிக்கப்படுகையில் தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றி எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எவ் ஜே அன்ட் ஜீ டீ சேரம் தாபனத்திற்குச் சேர்ப்பித்தல் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். ஆளின் பெயரையும், முகவரியையும் அல்லது குழுமமாயின் , குழுமத்தின் பெயரையும், முகவரியையும் அறிவித்தலானது குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாளினால் அல்லது குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்துடன் 2013 ஒற்றோபர் 2 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படின், அந்நேரத்திற்குப் பிந்தாமல் அவர் அதனைப் பெறும் வகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

எவ் ஜே அன்ட் ஜீ டீ சேரம்,
மனுதாரருக்கான சட்டத்தரணிகள்

9- 110

---

## சிவில் நியாயாதிக்கத்தை மேற்கொள்ள (வணிகம்) கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் xii ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்கலுக்கான விண்ணப்ப விடயத்தில்

அரச மரக்கூட்டுத்தாபனம்,
இல.82, இராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
........................................................மனுதாரர்

மே.நீ.(சிவில்)
இல. 24/2013/
CO

எதிர்

லங்கா டிம்பர் பிளான்டேஷன்ஸ் அன்ட், இன்டஸ் டிரீஸ் (பிரைவெட்) லிமிட்டட், சேனாநாயக்க கட்ட டம், இல.07, புகையிரத நிலைய வீதி, கொழும்பு03.

..................................................எதிராளி

பத்தரமுல்லை, இராஜவத்த வீதி, இல, 82 இல் அமைந்துள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பில் அமைந்துள்ள மேல்

மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் சிவில் நியாயாதிக்கத்தை மேற்கொள்ள ) 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தினால் மேற்கூறப்பட்ட கம்பனியை ஒடுக்கலுக்கான மனுஅளிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது என்பதுடன் அம் மனு 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எவரேனும் கடன் வழங்குனர் அல்லது மேற்கூறப்பட்ட கம்பனி இடாப்பிற்கு உதவுனர் மனுவிற்கு கட்டளையிடுவதற்கு அல்லது மறுதலிக்க விசாரணையன்று நேரடியாக வோ அல்லது சட்டவாதியினூடாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினூடானவோ தோற்றலாம். இத்தேவைப்பாட்டிற்காக அக்கம்பனியின் எவரேனும் கடன் வழங்குனர் அல்லது கம்பனி இடாப்பிற்கு உடனுதவுனர் இம் மனுவின் பிரதிக்கான பணத்தை கீழ்வரும் முகவரியில் செலுத்தி மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினூடாக மனுவின் பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம்:-

மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,
சட்ட மா அதிபர் திணைக்களம்,
புதுக்கடை,
கொழும்பு 12

**குறிப்பு**.- மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது தோற்ற விரும்பும் எவரும் மேற் கூறப்பட்ட பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிக்கு, அவரது நோக்கத்தைத் தெரிவித்து எழுத்து மூலம் அறிவித்தல் ஒன்றை வழங்க வேண்டும். அல்லது தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். இவ் அறிவித்தலில் தனிநபர் பெயர் மற்றும் முகவரி, நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, என்பவை குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அந்நபர், அல்லது நிறுவனம் அல்லது அவரது/ அவர்களது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி (எவரேனும் இருப்பின்) கையொப்பமிடல் வேண்டும். இவ் அறிவித்தல் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ மேற் கூறப்பட்ட முகவரிக்கு 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,

9-142

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.*

***அட்டவணை - 2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2013 |
| | | வெள்ளி | 25.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2013 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*